Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-8

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -23 | 06-03-2004 | சனிக்கிழமை | ஓசை-0017

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9261) 077-6059672

## தேர்தல் ஆணையாளரின் கூட்டத்தில் ஐ.ம.சு.மு. கலந்துகொள்ளவில்லை

### காரணம் எதையும் தேரிவிக்கவில்லை

(கொழும்பு)

**பொதுத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் செயலாளர்களுக்குத் தேர்தல் ஆணையாளர் நேற்று வைத்த கூட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உள்ளிட்ட ஒன்பது கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. இது தொடர்பாக ஐ.ம.சு.மு. காரணம் எதையும் தெரிவிக்கவில்லை.**

இலங்கையில் 51 கட்சிகள் பதிவுசெய்யப்பட்டுள்ள போதும் இம்முறை தேர்தலில் 24 கட்சிகளே போட்டியிடுகின்றன. இந்த 24 கட்சிகளின் செயலாளர்களுக்கும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க, அழைப்பு விடுத்திருந்தார். ஆனால 15 கட்சிகளின் செயலா ளர்கள் மாத்திரமே இதில் கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் வடக்கு-கிழக்கு பகுதி தேர்தல், தேர்தல் நடத்தும் முறை ஊடகங்களின் கட்சிகளுக்கான நேர ஒதுக்கீடு போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

ஐ.ம.சு. முன்னணி இதில் கலந்துகொள்ளாதது மட்டுமல்ல இதற்கான காரணத்தையும் தெரிவிக்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. ஐ.ம.சு.முன்னணியினருக்கு எதிர்காலத் திட்டம் எதுவும் அரசியலில் இல்லாததால் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று ஐ.தே.முன்னணியினர் கூறியுள்ளனர். (32)

## கிழக்கு நெருக்கடி தொடர்பாக இன்று செய்தியாளர் மாநாடு

(அலுவலகசெய்தியாளர்)

கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பாக விளக்கமளிக்க இன்று கிளிநொச்சியில் செய்தியாளர் மாநாடொன்று நடைபெறவுள்ளது.

காலை 10மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் உள்ளூர் மற்றம் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.(லோ)

## கிளி.யிலிருந்து யாழ். சென்ற மனைவி,மகனை காணவில்லை

### -கணவன் முறைப்பாடு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதாக கூறிச் சென்ற தனது மனைவியையும் குழந்தையையும் காணவில்லை என கிளி ஊற்றுப்புலத்தில் வசிக்கும் வசந்தகுமார் என்பவர் எமது செய்தியாளரிடம் தெரிவித் துள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி காலை கிளிநொச்சி ஊற்றுப் புலம் பகுதியில் இருந்து யாழ்ப் பாணம் இருபாலையில் உள்ள தனது தாயார் வீட்டிற்குச் செல்வதாக கூறிச்சென்ற தனது மனைவி வசந்தகுமார் சுசீலாதேவி (வயது26) என்பவரும், வ.சதீஸ் குமார் (வயது6) என்பவரும் இதுவரை இருபாலையில் உள்ள அவரது தாயார் வீட்டிற்குச் சென்றடையாத நிலையில் காணாமல் போயுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக சுசீலாதேவியின் கணவன் வசந்த குமார் தெரிவிக்கையில், தான் வேலைக்குச் சென்றவேளை திடீரென தனது தாயாரிடம் செல்வதாக அயல்வீட்டாரிடம் கூறிவிட்டு மூத்த மகனான வ.சத்தியலக்ஸ்சன

(8ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் தேர்தலில் வட-கிழக்கில் வாக்குப் பதிவு 99வீதமாக இருக்க வேண்டும்

### – திருமலை கூட்டமைப்பு வேட்பாளர் இரா.சம்பந்தன்

(திருகோணமலை)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ் வாக்காளர்களின் வாக்குப் பதிவு 99சத வீதமாக இருக்க வேண்டும். இதனை ஒவ்வொரு தமிழ் வாக்காளரும் உறுதி செய்ய வேண்டும் எதிர்வரும் தேர்தல் சாதாரண பொதுத் தேர்தல் அல்ல; விடுதலைப்புலிகளும் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபைக் கோரிக்கைக்கான ஆணையை சர்வதேச சமூகத்திற்கு உறுதி படத் தெரிவிக்கும் சர்வசன வாக் கெடுப்பாக தமிழ் மக்கள் கருத வேண்டும். இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் திருமலை மாவட்டத் தலைமை வேட்பாளருமான இரா.சம்பந்தன் திரியாய்க்கிராமத்தில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். திரியாய்ப் பிரமுகர் பொ.இராமநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டமைப்பு வேட்பாளர்களான முன்னாள் எம்.பி.க.துரைரெட்ண சிங்கம், சாஹுல் ஹமீது, சதாசண்முகநாதன் ஆகியோரும் பங்குபற்றினார்கள்.

"இரண்டு வருட கால சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் எடுத்துக் கொண்டுள்ள நிலைப்பாட்டை தமிழ் மக்கள் பூரணமாக ஆதரிக்கின்றனர் என்பதை சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்கள் இத் தேர்தலின் மூலம் எடுத்துக்காட்ட வேண்டும்." என்றும் சம்பந்தன் தெரிவித்தார். இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப் புலிகளுக்கு வழங்க வேண்டும். வழங்க முடியாவிடில் தமிழ் மக்களை அவர்களின் வழியில் செல்லவிட வேண்டும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலைக் கண்காணிக்க ஐ.ஒன்றிய குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதைக் கண்காணிக்க ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு ஒன்று விரைவில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளது.

அடுத்த வாரம் கொழும்பிற்கு வரும் இக்குழுவினர் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திலுள்ள வாக்காளர்கள் இராணுவக்கட்டுப் பாட்டுப் பிரதேசத்திற்குள் சென்று சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய நிலைமைகள் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்து ஆராயவுள்ளனர். அத்துடன் இக்குழுவினர் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் விஜயம் செய்து நிலைமைகளை ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (33)

## ஈ.பி.டி.பி.யின் முகாம்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ், தீவகம் பகுதிகளிலுள்ள ஈ.பி.டி.பி.யின் அலுவலர்களுக்கு இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளிலுள்ள ஈ.பி.டி.பி.யின் முகாம்களில் தேர்தல் கால நடவடிக்கைகளுக்கென மேலும் பல தேசவிரோதிகள் தங்கியுள்ளனர்.

இந்த முகாம்களிற்கு அண்மித்த பகுதிகளால் போக்குவரத்துச் செய்யும் மக்களை இராணுவத்தினரும் பொலிசாரும் சோதனை செய்து வருகின்றனர். படையினரதும் பொலிசாரினதும் இந்த நடவடிக்கை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.(33)

## எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காவிடின் நாடு இக்கட்டான சூழ் நிலையை எதிர் நோக்கும்

### - முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட

(கொழும்பு)

வரும் பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் நாடு இக்கட்டான சூழ் நிலையை எதிர் நோக்கும் என்று முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்தெரிவிக்கையில்; இவ்வாறான நிலைமையில் ஸ்திரமற்ற அரசாங்கம் ஒன்றினால் நாடு எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இத்தேர்தலினால் ஏற்படுகின்ற சமூகப் பொருளாதாரத்தாக்கங்கள் பற்றி மொறகொட குறிப்பிடுகையில், பலம் வாய்ந்த தலைமைத்துவமும் வலுவான ஆணையும் இன்றியமையாதது என்று வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான தன்மைகள் சகல மக்களுக்கும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்மானங்களை எடுப்பதற்கு ஏதுவாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தெற்கில் இடம் பெற்ற மக்கள் கலந்துரையாடல் ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலனைக் கருத்தில் கொள்ளாது அதிகாரத்தை மாத்திரம் நோக்கமாகக் கொண்ட அரசியல் கலாச்சாரம் ஒளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## பன்முகத்தன்மை கொண்ட அரசை தேர்ந்தெடுக்க இது ஒரு சந்தர்ப்பம்

### -தேர்தல் குறித்து ஐ.ஒன்றியம் அறிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தல் வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த மக்கள் பன்முகத்தன்மை கொண்டதும் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடியதுமான அரசாங்கம் ஒன்றைத், தேர்ந்தெடுக்கச் சந்தர்ப்பம் ஒன்றை அளித்திருக்கிறது என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள ஐரோப்பிய தூதரகம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## எஸ்.பி.திசாநாயக்கவின் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்குக

### ஐ.தே.க. தேர்தல் ஆணையாளரிடம் கோரல்

அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவின் பாதுகாப்புக்கு உடனடி நடவடிக்கை எடுக்கும்படி ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்காவைக் கேட்டுள்ளது. அநுராபண்டார நாயக்கவின் கூற்றை யிட்டு ஐக்கியதேசியக் கட்சிச் செயலாளர் செனரத் ஹப்புக் கொட்டுவ தேர்தல் ஆணையாளருக்கு எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டுள்ளார். கடித்தில் கூறியுள்ளதாவது டெயிலிமிரருக்கு 3ஆம் திகதி அனுராபண்டாரநாயக்க கூறியுள்ள கருத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அதாவது திசா நாயக்க

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகளிடையே மோதல்

### 20க்கும் மேற்பட்டோர் காயம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைக் கைதிகளில் இரண்டு குழுக்களுக்கிடையே நேற்று மாலை மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. நேற்று மாலை 6.30மணிக்கு இடம பெற்ற இச்சம்பவத்தில் ஐந்து பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 300இற்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர். 20இற்கும் அதிகமானோர் படுகாய மடைந்துள்ளனர்.

இது குறித்து சிறைச்சாலைப் பேச்சாளர் தெரிவிக்கையில், இந்த மோதல் பொலிசாரினால் கட்டு பாட்டிற்குள் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் மோதலுக் கான காரணம் என்னவெனத் தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.இந்த மோதல் சம்பவத்தில் முன்னூறு சிறைக் கைதிகள் ஈடுபட்டதாகவும், இதன் போது 20பேர் காயங்களுக்கு உள்ளான

(8ஆம் பக்கம் பார்க்க)

### பிற்போடப்பட்டுள்ளது

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு மாவட்டமட்டத்தில் இடம்பெற்ற மகளிர் விளையாட்டுப் போட்டிகளின்

(8ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

## வயல்காணி விற்பனைக்குண்டு

கிளி. 4ஆம் வாய்க்காலில் இருபோகம் நீர்ப்பாசன வசதியுள்ள வயல்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி:- இல.61-கணேசபுரம் கிளிநொச்சி. (4298)


## பாதுகாப்பற்ற நிலையில் மின் விநியோகம்

ஸ்கந்தபுரம், அக்கராயன் பகுதியில் பாதுகாப்பற்ற நிலையில் மின் விநியோகம் செய்யப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.மின் கம்பங்கள் சில முறிந்தும் சில உக்கிய நிலையில் முறிவடையும் நிலையில் உள்ளன. இதனால் இப்பகுதியில் மின் விநியோகம் அபாய நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

# மருத்துவப் பரிசோதனை அறிக்கை முல்லை. கட்டம் 1 வைத்தியசாலையில்

இதுவரைகாலமும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மாவட்ட வைத்தியசாலையில் வழங்கப்பட்டு வந்த சகல மருத்துவ பரிசோதனைகளுக்கான அறிக்கைப்பத்திரம் (மெடிக் கல்) நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு ஞாயிறும் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலைகட்டம் 1பரிசோதனை செய்து வழங்கப்படும் என சகல மருத்துவப் பரிசோதனையாளர்களுக்கும் முல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவிக்கின்றார்.

இதுவரை காலமும் ஒவ்வொரு ஞாயிறும் புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் நடைபெற்றது போன்ற நடைமுறையே கடைப்பிடிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (20)

# புதுக்குடியிருப்புப் பகுதியில் துவாரம் ஏற்பட்டு காணப்படும் மதகு

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் துர்க்கா வீதிச்சந்தியில் அமைந்துள்ள மதகு சேதமடைந்து காணப்படுகிறது. இம்மதகில் துவாரங்கள் ஏற்பட்டு பாதசாரிகளுக்கு போக்கு வரத்து நெரிசலை ஏற்படுத்தி வருகின்றது. இத்துவாரத்திற்கு பரல் தகரம் போடப்பட்ட போதும் அப்பரல் தகரமும் நசிந்து கொண்டுள்ளது. இதில் பயணிக்கும் துவிச்சக்கரவண்டி மற்றும் உந்துருளிகளில் பயணிப்பவர்கள் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர் இவ்விடத்தில் அடிக்கடி சிறு சிறு விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் இவ்விடத்தில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (26)


## வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் பிற்போடல்

முல்லை. மாவட்ட சி.க.கூ. சமாசத்தின் வருடாந்தப் பொதுச்சபைக்கூட்டம் 2004.03.06 ஆம் திகதி நடைபெற இருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. கூட்டத் திகதி பற்றி பின்னர் அழைப்பு அனுப்பப்படும் என்பதை அங்கத்துவ சங்கங்கள் மூலம் சமாசம் வருகை தரவுள்ள பேராளர்களுக்கு அன்போடு அறியத்தருகின்றேன்.

தகவல்: மாவட்ட செயலாளர்,
மு.மா.சி.கூ.சமாசம்,
கற்சிலைமடு.

(4053)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும்

## நாடகப்போட்டியும் நாடக விழாவும்

மேற்படி நாடகப் போட்டியும் நாடக விழாவும் எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதியில் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ளது. இப் போட்டியில் பங்குபற்றவுள்ள பாடசாலைகள், நாடகமன்றங்கள் குழுக்கள் அமைப்புக்கள் என்பன இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
திருகோணமலை.

போட்டிக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 20.03.2004
தொலைபேசி இல. 026.2220036

(சி-9323)



பாலைதீவு
புனித அந்தோனியார் யாத்திரை
திருத்தல திருவிழா

பாலைதீவு புனித அந்தோனியார் யாத்திரைத் திருத்தல திருவிழா எதிர்வரும் 14.03.2004 ஞாயிறு காலை 7மணிக்கு இடம் பெறும் திரி தின வழிபாடுகள் 11ஆம் திகதி மாலை ஆரம்பமாகும்.

'நன்றி'

பரிபாலகர்,
புனித அந்தோனியார் ஆலயம்,
பாலைதீவு.

(4297)



இலங்கை அரசு
வடக்கு – கிழக்கு மாகாணசபை
வடக்கு – கிழக்கு துரித மீளமைப்புத்திட்டம்
கடன் இலக்கம் 2880 சி.இ.
தேசியப் போட்டிக் கூறுவிலை கோரல்
குடிசார் வேலைகள் (Civil works)

## கேள்வி அறிவித்தல் (ஐ.எப்.பி)

திகதி: 01.03.2004
ஐ.எவ்.பி.இல.எம்யு-நீர்ப்-சீ எல்ஜி-டபிள்யுஎஸ்எஸ்-01

1. வடக்கு- கிழக்கு துரித மீளமைப்புத்திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து உலகவங்கியின் பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

ஐ.டி.எ.(IDA) நம்பிக்கையின் கீழான வசதி

2. மாவட்டச்செயலாளர் முல்லைத்தீவு இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து பின்வரும் வேலைத்தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

அட்டவணை

| ஐ.எப்.பி.இல | வேலை விபரம் | கேள்விப் பிணை (இலங்கை ரூபா) | கேள்வி ஆவணங்களின் பெறுமதி (இலங்கை ரூபா) | வேலை முடிக்கப்படவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| எம்யு-நீர்ப்-சீஎல்ஜி-டபிள்யுஎஸ்எஸ் 01 | மல்லாவி நகரம் சந்தை பாடசாலை மற்றும் வைத்தியசாலை நீரவிநியோகத்திட்டம் | 125000.00 | 800.00 | 05 மாதம் |

3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் மேலுள்ள அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது முல்லைத்தீவில் மாற்றத்தக்கதான முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரின் பெயரில் தபாலலுவலகத்தில் பெறப்பட்ட காசுக் கட்டளையாகவோ மாவட்டச்செயலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் பெயரில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முல்லைத்தீவு அவர்களிடமிருந்து 06.04.2004 அன்று 15மணிவரை கேள்விப்பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளமுன் விரும்பின் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
முல்லைத்தீவு.

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரின் பெயரில் பெறப்பட்ட கேள்விப்பிணையையும் கேள்விகளுடன் இணைத்து தலைவர், கேள்விச்சபை .. மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு, இலங்கை என்ற முகவரியில் 07.04.2004 அன்று 15.00மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம் கேள்விகள் திறக்கப்படும்.
கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாள் அன்று அதேயிடத்தில் அதேநேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

6. கேள்விதாரர்கள் கேள்விகளுக்கான செயற்பிரமாண குறிப்புக்கள் 4ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாக கொண்டிருத்தல் வேண்டும் எனஇத்தால் ஆலோசனை வழங்கப்படுகிறது. இந்தக் கேள்விப்பத்திரத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளத்தையும், ஆளணியையும், அனுபவத்தையும் கொண்டிருத்தல் ஒரு தனி ஒப்பந்தக்காரருக்கு தேவைப்படும் தகைமையாகும்.

7. வேறு ஏதாவது விபரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

(மேரி ஆன் இமெல்டா சுகுமார்)
அரசாங்க அதிபர்,
மாவட்டச்செயலகம்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-7169)

# ஆயுதங்களைக் கைவிடப்போவதாக கெயிட்டி கிளர்ச்சியாளர் அறிவிப்பு

**கெயிட்டி கிளர்ச்சிப்படைகள் தமது வசமுள்ள ஆயுதங்களைக் கைவிடப் போவதாக அறிவித்துள்ளன. அத்துடன் தலைநகர் போர்ட் ஆ:ப் பிரின்ஸில் இருந்து படைகளை வாபஸ் பெறவும் சம்மதித் துள்ளன.**

கெயிட்டியிலுள்ள சிரேஷ்ட அமெரிக்க இராணுவ அதிகாரியுடன் பிலிப்பி நடத்திய பேச்சு வார்த்தைகளையடுத்தே, அவர் ஆயுதக் களைவிற்குச் சம்மதித் துள்ளார்.

முன்னாள் சனாதிபதி அரிஸ்டைட்டின் ஆதரவாளர்களிடம் உள்ள ஆயுதங்களைக் களைவதற குச் சர்வதேச அமைதிப்படை கெயிட்டி வர இருப்பதால், தனது கிளர்ச்சியாளர்களிடம் உள்ள ஆயுதங்களைக் களைவதற்குத் தான் சம்மதம் தெரிவிப்பதாக அவர் கூறியுள்ளார்.

எனினும் கெயிட்டிக்கான சர்வதேச படையினர் அமெரிக்கா, பிரான்ஸ், கனடா நாடுகளைச் சேர்ந்த 1700 வீரர்கள் எந்த அணியின் பக்க மும் சாரமாட்டார்கள் என்றும் வாஷிங்டன் கூறியுள்ளது.

இதேவேளை, தலைநகரைப் பாதுகாக்கும் பணியில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்ததாங்கிகள், கவச வாகனங்களில் இவர்கள் ரோந்து புரிகின்றார்கள். கொலை, கொள்ளை, தீ வைப்புக்களைத் தடுப்பதில் கவனமாகவுள்ளனர். இதேநேரம் பிரதமர் நெல்டின் அவசரகால நிலையை அங்கு பிரகடனம் செய்துள்ளார். இதனால் அரசியல் யாப்பு உரிமைகள் சில மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. பத்திரிகைச் சுதந்திரம், ஆர்ப்பாட்டம் செய்யும் சுதந்திரம் என்பன அவசர காலச் சட்டத்தால் மறுக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை, தலைநகருக்குச் சற்றுத் தொலைவில் அரிஸ்டைட் ஆதரவாளர் ஒருவரைக் கீழே கிடத்தி மக்கள் அவரது தலையில் கல்லைப் போட்டனர். பின்னர் அந் நபரை உயிருடன் எரித்துள்ளனர்.

இதேவேளை, கெயிட்டியில் நேற்று வங்கிகள் அனைத்தும் திறக்கப் பட்டுள்ளது.

ஒரு மாத காலம் இடம்பெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சீனாவின் தென்மேற்கு மாகாணமான யுனானில் திருமணப் பந்தியில் நஞ்சுகலந்த உணவை உண்டதால் 76 பேர் மயக்கமுற்று வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் ஒருவரைத் தூக்கிச்செல்லும் காட்சியே இது.

# சர்.அணுசக்தி அமைப்புடன் ஈரான் ஒத்துழைக்கிறது

## -சர்.அணுசக்தி அமைப்பின் பணிப்பாளர்

(தெஹ்ரான்)

ஈரான் அதன் அணு ஆயுதத் திட்டம் தொடர்பாக விபரங்களை வெளியிட்டதில் குறைபாடுகள் காணப்படுகின்ற போதிலும் ஈரான் சரியான திசையில் நடைபோட ஆரம்பித்துள்ளது.

இவ்வாறு ஈரான் சென்றுள்ள சர்வதேச அணுசக்தி அமைப்பின் பணிப்பாளர் நாயகம் முஹம்மல்-எல்- பாரடி கூறியுள்ளார்.

ஈரான் இப்போது சர்வதேச அணுசக்தி அமைப்புடன் மிகவும் ஒத்துழைத்துச் செயற்படுகின்றது. இந்த விடயத்தில் ஈரானின் நிலைப்பாட்டில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஈரானின் அணு ஆயுதத்திட்டம் தொடர்பாக நாம் மிகவும் சிறந்த முறையில் புரிந்து கொண்டுள்ளோம். ஈரானின் அணுத்திட்டங்கள் செயற்படும் பல இடங்கள் எமக்குக் காண்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் வேறும் பல இடங்கள் எமக்குக் காட்டாமல் உள்ளன என்று கூறிய அவர்,

எதிர்வரும் திங்கட்கிழமை அணுசக்தி அமைப்பின் ஆளுநர்கள் மாநாடு வியன்னாவில் நடைபெறவுள்ளது. இதில் ஈரானின் ஒத்துழைப்பு பற்றி ஆராயப்படும் என்றும் கூறியுள்ளார்.

எனினும் ஈரான் களவான முறையில் அணுவாயுத உற்பத்தியில் ஈடுபடுவதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது. அத்துடன் ஐ.நா.சபை அந்த நாட்டின் மீது கட்டுப்பாடுகளை கொண்டு வரவேண்டும் என்றும் கேட்டுள்ளது.

# மத்தியகிழக்கு சமாதான முயற்சியில் முன்னேற்றமில்லாது அரேபிய உலகில் சீர்திருத்தங்களைச் செய்ய முடியாது

## -ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி தெரிவிப்பு

மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணாமல் அரேபிய உலகத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடியாது என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைகளுக்குப் பொறுப்பான ஜாதிய சுலானா கூறியுள்ளார்.

இரண்டு நடைமுறைகளும் வெவ்வேறாக முன்னெடுக்கப்படக் கூடியது என்று அமெரிக்காவின் கருத்து உள்ளது.

அரேபிய நாடுகளின் சனநாயக ரீதியான மறுசீரமைப்பை அறிமுகப்படுத்துவது தொடர்பாக அமெரிக்கா சில யோசனைகளை வெளியிட்டுள்ளது.

அரேபிய-இஸ்ரேலிய நெருக்கடிகள் பற்றி எதுவும் கூறாது பிராந்தியத்தில் அரசியல் பொருளாதாரம் சமூகப் பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துவதாக அவை அமைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

# அமெ.நிறுவன பணிகளை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதைத் தடுக்கும மசோதா செனட்டில் நிறைவேறியது

(வாஷிங்டன்)

அமெரிக்க நிறுவனங்கள் தங்களின் பணிகளை வெளிநாட்டு நிறுவனங்களிடம் வழங்குதைத் தடுக்கும் மசோதாவை 70க்கு 26 என்ற வாக்கு வித்தியாசத்தில் அமெரிக்காவின் செனட்சபை நிறைவேற்றியுள்ளது.

செனட்சபையில் சனநாயகக் கட்சி உறுப்பினர் கிருஷ்ணபிரகாட் இம்மசோதாவை முன்வைத்துள்ளார். ஆனால் இத்தகைய தடை பாரிய விளைவை ஏற்படுத்துமென குடியரசுக்கட்சியின் உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.



கடந்த செவ்வாய்க்கிழமை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற ஈராக்கில் கசீமியா மாவட்டப் பள்ளிவாசலின் வாசல்ப்பகுதியில் நேற்று தொழுகையிலீபட்டிருக்கும் மக்கள்.

# விண்ணிலிருந்து விண்ணிலுள்ள இலக்குகளை தாக்கி அழிக்கும் புதிய ஏவுகணை

## தயாரிப்பது பற்றி ரஷ்யா - இந்தியா பேச்சு

(புதுடில்லி)

சாதாரண கண் பார்வைக்கு அப்பாற்பட்ட தூரத்தில் விண்ணிலிருந்து பாய்ந்து விண்ணிலுள்ள இலக்குகளை அழிக்கவல்ல நவீன ஏவுகணையைத் தயாரிப்பது குறித்து இந்தியாவும் - ரஷ்யாவும் பேச்சு நடத்தியுள்ளன.

இந்த ஏவுகணையை ரஷ்யாவின் நோவேடர் என்ற நிறுவனம் தயாரித்து வருகிறது. இதற்குத் தேவைப்படும் நிதியுதவியையும் தொழில் நுட்ப உதவிகளையும் இந்தியா அளித்து வருகின்றது.

விண்ணிலிருந்தபடியே நமது இராணுவ இலக்குகளை குறி வைக்கும் அல்லது கண்காணிக்கும் எதிரிகளின் வேவுவிமானங்களைத் தாக்கி அழிக்கவும் நடுவானிலேயே போர் விமானங்களில் எதிரி எரிபொருளை நிரப்பும் விமானங்களை நிர்மூலம் செய்யவும் எதிரிகளின் கண்காணிப்பு விமானங்களை தாக்கி அழிக்கவும் இந்த ஏவுகணை பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த ஏவுகணை ஆர்-172 என்று அழைக்கப்படுகின்றது.

# வெனிசுவெலாவிற்கான ஐ.நா.தூதுவர் இராஜினாமா

வெனிசுவெலாவில் நேற்று முன்தினம் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் ஐ.நாடுகள் ஸ்தாபனத்தில் வெனிசுவெலாவின் தூதுவராக உள்ளவர் தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

இவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்; வெனிசுவெலா சனாதிபதியின் அரசாங்கம் சனநாயக கொள்கையை கடைப்பிடிக்கவில்லையெனவும் அடக்குமுறையை கடைப்பிடித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# செப்-11 தாக்குதல் குறித்து 11 சந்தேகநபர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அமெ.தெரிவிப்பு

(வாஷிங்டன்)

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவில் இரட்டைக் கோபுரங்கள் மீது நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுடன் தொடர்புடைய பதினொரு வர்த்தகர்கள் இனங்காணப் பட்டுள்ளனர் என பென்டகன் அறிவித்துள்ளது.

மூன்று மாத காலமாக சுமார் இரண்டு இலட்சம் பேரிடம் விசாரிக்கப்பட்ட விசாரணையின் பின்னர் இத்தகவல் கிடைத்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இவர்கள் அமெரிக்காவின் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடுபவர்களெனவும் அத்துடன் தாக்குதலை மேற்கொண்ட அல்ஹைதா அமைப்புடன் இவர்களுக்கு நெருங்கிய தொடர்பிருந்தமை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பறவைக் காய்ச்சலால் உலக வர்த்தகம் பாதிப்பு

பறவைக் காய்ச்சல் நோயால் உலக கோழி இறைச்சி ஏற்றுமதியில் மூன்றில் ஒரு பங்கு குறைவடைந்துவிட்டது. கோழி இறைச்சி இறக்குமதிக்கு பல நாடுகள் தடைவிதித்துள்ளன.

இந்தத்தடை தொடர்ந்து நீடித்தால் உலக வர்த்தகத்துக்கு 50 ஆயிரம் கோடி டொலர்கள் நட்டம் ஏற்படும் என்று ஐ.நா. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு எச்சரித்துள்ளது.



காசாவில் இஸ்ரேலிய உலங்குவானூர்தியின் தாக்குதலுக்குள்ளாகி அழிந்த பலஸ்தீனரின் காரில் இருந்து இறந்தவர்களது உடற்பாகங்களும் உடுப்புக்களும் மீட்கப்படுகிறது. இச்சம்பவத்தில் கமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த இருவரும் ஒரு பலஸ்தீனப் பொதுமகனும் கொல்லப்பட்டிருந்தனர்.

# பாம்பு

## மலைப்பாம்பு

மலைப்பாம்பு மிகவும் ஆபத்தானது. காரணம் இதற்கு விஷமில்லை என்றாலும் தனக்கு அருகில் வருவனவற்றை கட்டி அமுக்கி தனக்கு இரையாக்கிக் கொண்டு விடும்.

முட்டை போடும் வகையைச் சேர்ந்தது மலைப்பாம்பு. இதனுடைய வாய் பல மடங்கு விரியும் ஆற்றல் கொண்டது. கண் சிமிட்டும் நேரத்தினுள் தனது இரையைப் பிடித்து, உடலால் இறுக்கி சுற்றி வளைத்துக் கொள்ளும். தான் பிடித்த இரையில் உயிர் இருக்கா, இல்லையா என்று உடலைச் சிறிது தள்ளிப்பார்த்து அறிந்து கொள்ளும். அப்படி உயிர் இருந்து அகப்பட்டுக் கொண்டது ஓடமுனைந்தால் திரும்பவும் உடலால் இறுக்கிக் கொன்று விடும். இதன்பின்னர் தலையில் இருந்து ஆரம்பித்து முழு இரையையும் விழுங்கி விடும். தனது வயிறு நிரம்பியவுடன் ஓய்வாக சுருண்டு விடும்.

அதேபோல் மலேசியா நாட்டில் காணப்படும் மலைப்பாம்பு ஈரப்பதன் கொண்ட பகுதிகளில் மட்டும் தான் இருக்கும். கடும் வெப்பமான சூழலில் வாழாது. இந்த வகை மலைப்பாம்புகளை பர்மாவிலும், இந்தியாவின் கிழக்குப் பகுதிகளிலும் காணமுடியும்.

## பச்சைப்பாம்பு

பச்சைப்பாம்பு விஷமில்லாதது. இது பச்சை நிறத்தில் காணப்படும். இது செடி, கொடிகளுடன் பிணைந்து கிடப்பதால் இதனை இனம் கண்டு கொள்வது கஷ்டமானது. எல்லாப்பாம்புகளையும் போலவே இதன் வாயும் நன்றாக விரியும் தன்மை கொண்டது. சூழ்நிலைகளுக்குத் தகுந்த மாதிரி இதனுடைய நிறத்தில் மாறுதல் ஏற்படும்.

## சாரைப்பாம்பு

சாரைப்பாம்பு எனும் வகையும் விஷம் இல்லாதது. இது இருக்கும் இடத்திற்கு ஏற்றமாதிரி பல்வேறு நிறங்களில் காணப்படும்.

## கொம்பேறிமூக்கன்

கொம்பேறிமூக்கன் என்ற பாம்பு வகையும் விஷம் இல்லாதது. இது மரத்தில் மட்டும் தான் கூடுதலாகத் தனது காலத்தைக் கழிக்கின்றது.


## கட்டுவிரியன்

கட்டுவிரியன் என்பது விஷமுள்ள பாம்பு வகையைச் சேர்ந்தது. தென்கிழக்கு ஆசியாவில் அதிகம் காணப்படும். நாகபாம்பை விட இதன் விஷம் அதிகமானது. இந்தியாவில் இந்தப் பாம்புக்கடிக்கு ஆளாவோர் அதிகம்.

ஆறடி நீளம் கொண்டது. இதற்கு மற்றப் பாம்புகள் போலவே காதுகள் கிடையாது.

## நாகபாம்பு

நாகபாம்பு விஷம் கொண்டது. இதன் விஷம் மருந்துகள் தயாரிக்கப் பயன்படுத்தப் படுகின்றது. காதுகள் இல்லாத நாக



பாம்பு கண்களில் அசைவுகள் கண்டுவிட்டால் அதையே தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும். மகுடி வாசிப்பதனால் பாம்பு வசப்படுவதில்லை. பாம்புக்கு காது இருந்தால் தானே இசைக்கு மயங்குவதற்கு. மகுடி வாசிப்பவர்களின் கால்களின் அசைவுக்கு ஏற்ப பாம்பு அசையும். பின்னர் நகரத் தொடங்கும். மகுடிக்கு பாம்புகள் மயங்குவதாகக் கூறுவது பொய் என்று ஆய்வுகள் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

கிட்டத்தட்ட இதுவும் ஆறடி நீளம் வரை வளரும்.

இதன் வாயில் மேற்புறத்திலுள்ள இரண்டு பற்கள்தான் விஷமுடையவை. உணவு உண்ணும் போது விஷப் பற்களை இது பாவிப்பதில்லை.

இவை தோன்றிய இடம் ஆபிரிக்கா தான். இங்கு நான்கு வகையான நல்ல பாம்புகள் உள்ளன. இவற்றில் இரண்டு வகை மட்டுமே இந்தியாவில் உள்ளது.

பாம்பின் உமிழ்நீரில் ஏற்படும் ஒருவகை மாற்றமே அதன் விஷமாகின்றது.

பாம்புகள் சில சமயங்களில் மட்டும் 60,70 முட்டைகள் இடும். இது றப்பர் பந்து போல் இருக்கும். கீழே விழுந்தால் உடையாது. இந்த முட்டைகள் சிலது 04 நாட்களில் கூடப் பொரிக்கும். சில முட்டைகள் மூன்று மாதங்களில் பொரிக்கும்.

# புதிய பாரம் குறைந்த Note book கணினி

புதிய பாரம் குறைந்த Note book கணினி ஒன்றை யப்பானின் மற்சுயிரா நிறுவனம் உருவாக்கியுள்ளது. ரோக்கியோவில் கம்பனியில் தலைமை அலுவலகத்தில் அதன்பணியாளர் ஒருவர் இதைக் கையில் வைத்துக் காண்பிக்கின்றார்.

இதன் நிறை 1490 கிராம் 14.1 அங்குல திரையும் இதில் உள்ளது. இது விரைவில் சந்தைப்படுத்தப்படவுள்ளது. இதன் மதிப்பெறுமதி இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் ஜென்களாகும்.



# மஞ்சள்

மஞ்சள் மங்களகரமான பொருள். தமிழர்கள் தாலிக்கு பதில் மஞ்சளை கட்டும் வழக்கம் உண்டு. அதனால் தங்கத்திற்கு ஈடாக மஞ்சளை கருதுகின்றனர். மஞ்சளும் வேம்பும் சேர்த்தரைத்த வுடன் வைரஸ் நோய்களை எதிர்க்கும் சக்தி அமைவதை கண்டு உலகமே வியக்கிறது. மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்த்து ஆலம் சுற்றுவது வெறும் சம்பிரதாயத்திற்கு அல்ல. கண்ணைச் சுற்றி படிந்திருக்கும் திருஷ்டியை போக்க வல்லது.

வியர்வைநாற்றம், புலால்நாற்றம்வீசும் உடம்பை உடையோர் மஞ்சளை பூசிக் குளித்தால் துர்நாற்றம் மறையும்.

மஞ்சளிலிருந்து செய்யப்படும் குங்குமமே உயர்ந்தது. அதை காகிதத்தில் தேய்த்துப் பார்த்தால் காகிதம் மஞ்சளாக மாறும். அதுவே தரமான மஞ்சள் குங்குமமாகும். உடல் ரீதியில் அழகைத்தரும் மஞ்சள் உணவுவகையிலும் நல்ல பயன்களைத் தருகின்றது.

மஞ்சள் பசியைத் தூண்டும் தன்மை கொண்டது. மஞ்சளை உணவு பதார்த்தத்தில் சேர்ப்பதால் கிடைப்பது நிறம் மாத்திரமல்ல. உணவிலுள்ள தேவையற்ற கிருமிகளையும் வயிற்றுக் கிருமிகளையும் நீக்கும் தன்மை இதற்குண்டு.

மஞ்சள் மருத்துவ ரீதியாகவும் பயன்படுகிறது. மஞ்சளை சுட்டு முகர மூக்கில் நீர் வடியும் ஜலதோஷம் நீங்கும். அடிபட்டதனால் ஏற்பட்ட இரத்தக்கட்டு உள்காயங்களை நீக்க மஞ்சளை பற்றாகப் போட சுகமாகும். தொற்றும் கண் நோய் வந்தவர்கள் அதன் வேகம் தணியவும் அது மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்கவும் மஞ்சள் தோய்த்த துணியால் அடிக்கடி கண் மீது துடைக்க வேண்டும். மஞ்சள் பொடியை புண்கள் மீது தூவ புண்கள் ஆறும்.

மஞ்சளுடன் வேப்பிலையை அரைத்துப்பூச அம்மையினால் ஏற்பட்ட கொப்புளங்கள் ஆறும். மஞ்சள், சுண்ணாம்பு, பொட்டலுப்பு மூன்றும் அரைத்துப் பூச்சுளுக்குப் பிடிப்பு மாறும்.

தினம் ஒருவேளை அரை கிராம் மஞ்சள்பொடி சாப்பிட வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், வாதம் போகும்.

மஞ்சளை இலுப்பை எண்ணெயில் குழைத்து தடவ கால் வெடிப்பு குணமாகும்.

# கடத்தும் இழையங்கள் Vascular tissue

| காழ் [Xylem) | உரியம் [Phloem) |
|---|---|
| 1. நீர், நீரில் கரையும் பொருட்களைக் கடத்தம் | உணவைக் கடத்தும் |
| 2. ஒரு திசையில் கடத்தப்படும் | இரு திசைகளிலும் கடத்தப்படும் |
| 3. சுவர் தடிப்பானது | சுவர் மெல்லியது |
| 4. வலிமையானது | வலிமை குறைந்தது |
| 5. தாங்குமிழையம் என அழைக்கப்படும் | கடத்தும் இழையம் என அழைக்கப்படும் |
| 6. காழ்கலன், குழற்போலி, காழ்புடைக்கலவிழையம், காழ்நார் கொண்டது. | நெய்யரிகுழாய், தோழமைக்கலம், உரியப் புடைக்கலவிழையம் கொண்டது. |

# தசை இழையங்கள் Muscle tissue

| மாமளப்பான தசை Smooth muscle | வன்கூட்டுத் தசை Skeleton muscle | இதயத்தசை Cardiac muscle |
|---|---|---|
| இச்சையில் தசை கட்டுப்பாடின்றி (எமது ஆளுகையின்றி) செயற்படல் | இச்சை வழி இயங்கும் தசை (இச்சைகளால் ஆளப்படுதல்) | இச்சையில் தசை கட்டுப்பாடின்றிச் செயற்படல் |
| வரி கொள்ளாத்தசை (குறுக்கு வரிகள் காணப்படாமை) | வரிகொண்ட தசை (கிடையாக அமைந்த குறுக்கு வரிகள் காணப்படும்) | வரிகொண்ட தசை (குறுக்கு வரிகள் காணப்படும்) |
| கிளை அற்றது | கிளை அற்றது | கிளை கொண்டது |
| சுருங்கலும் தளர்வும் மிகமந்தமாக நடைபெறும் | சுருங்கலும் தளர்வும் துரிதமாகச் செயற்படும் | சுருங்கலும் தளர்வும் குறித்த சந்தத்திற்கு ஏற்ப குறித்தவீதத்தில் நடைபெறும் |
| ஆறுதலான சுற்றுச் சுருக்கலுக்குரியது | விரைவான சுருக்கம் | ஆறுதலான சுருக்கம் |
| ஒடுங்கிய கதிர்உருவம் | உருளை வடிவம் | கிளைத்த உருளை வடிவம் |
| உ+ ம்: குருதிக்கலங்கள் சிறுகுடல், சிறுநீர்ப்பை | உ+ ம்: இருதலைத்தசை முத்தலைத்தசை | உ+ ம்: இதயம் |

# எண்ணிக்கை தெரியுமா?

| | இங்கிலாந்து | அமெரிக்கா |
|---|---|---|
| 1 முதல் 5 பூஜ்ஜியம் | நூறுஆயிரம் | நூறுஆயிரம் |
| 1 முதல் 6 பூஜ்ஜியம் | மில்லியன் | மில்லியன் |
| 1 முதல் 7 பூஜ்ஜியம் | 10 மில்லியன் | பத்து மில்லியன் |
| 1 முதல் 8 பூஜ்ஜியம் | 100மில்லியன் | நூறு மில்லியன் |
| 1 முதல் 9 பூஜ்ஜியம் | பில்லியன் | மில்லயர்ட் |
| 1 முதல் 12 பூஜ்ஜியம் | டிரில்லியன் | பில்லியன் |
| 1 முதல் 15 பூஜ்ஜியம் | குவாட்ரில்லியன் | ஆயிரம் பில்லியன் |
| 1 முதல் 18 பூஜ்ஜியம் | குவின்டில்லியன் | டிரில்லியன் |
| 1 முதல் 21 பூஜ்ஜியம் | செக்ஸ் டில்லியன் | ஆயிரம் டிரில்லியன் |
| 1 முதல் 24 பூஜ்ஜியம் | செப்டில்லியன் | குவாட்ரில்லியன் |
| 1 முதல் 27 பூஜ்ஜியம் | ஒக்டில்லியன் | ஆயிரம் குவாட்ரில்லியன் |
| 1 முதல் 30 பூஜ்ஜியம் | நன்னில்லியன் | குவின்டில்லியன் |
| 1 முதல் 33 பூஜ்ஜியம் | டிஸில்லியன் | ஆயிரம் குவின்டில்லியன் |

# வன்முறையைக் கட்டவிழ்த்துவிட ஐக்கிய தேசிய முன்னணி திட்டம்

## -குற்றம்சாட்டி தேர்தல் ஆணையாளருக்கு ஜே.வி.பி.கடிதம்

(கொழும்பு)

**எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின் போது வன் செயல்களைத் தூண்டிவிடுவதற்குப் படைகளிலிருந்து தப்பியோடி யோரையும் பாதாள உலகக் குழுவினரையும் ஐக்கிய தேசியக்கட்சி பயன்படுத்தவுள்ளதாக ஜே.வி.பி. தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.**

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது தேவையற்ற விதத்தில் பொய்ப்பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே திட்டம் தீட்டியுள்ளது.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான பொலிசாருக்கு லஞ்சம் வழங்கி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதவாளர்கள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக் கைது செய்ய வைப்பது போன்ற முயற்சியிலும் ஐக்கிய தேசியக்கட்சி ஈடுபடத் தீர்மானித்துள்ளது. தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் வன்செயல்களில் ஈடுபட்டுவிட்டு அதனை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது சுமத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவான தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கருகில் வன்முறைகளைத் தூண்டிவிட்டு வாக்களிப்பைக் குறைக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி செய்கிறது.

இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பொலிசாருக்குக் கட்டளையிடுவதற்கு 17ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது. எனவே தேர்தல் ஆணையாளர் இவற்றை செயற்படுத்த வேண்டுமென அந்தக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

# மாணவர்கள் சந்திப்புக் குறித்து கண்காணிப்புக்குழு விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களிற்குமிடையான சந்திப்பு இடம்பெற்றமை குறித்துக்கண்காணிப்புக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கான விசேட ஏற்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் மேற்படி மாணவர்களிடையான சந்திப்பு இடம்பெற்றது.

ஆனால் சந்திப்பானது விடுதலைப்புலிகளால் நடத்தப்படுவதாக தேசவிரோதிகளால் வழங்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து உடனடியாக அங்கு வந்திறங்கிய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இது குறித்துத் தீவிர மாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

மாணவர்களின் தேசியப் பற்றுள்ள மன உணர்வுகளை தப்பான அபிப்பிராயத்துடன் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை செய்ததால் அங்கு கண்காணிப்புக் குழுவினருக்கும் மாணவர்களுக்குமிடையே பெரும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மாணவர்கள் தம் கடுமையான ஆட்சேபத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். (33)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தேர்தல் நடத்தப்படவேண்டும்

## ஐ.தே. முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில்உள்ள பிரதேசங்களிலும் தேர்தலை நடத்த வேண்டியதன் அவசியத்தை ஐக்கிய தேசிய முன்னணி வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச கண்காணிப்பாளர்களின் உதவியோடு இதனை மேற்கொள்ள முடியும் என்று அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய இராணுவத்தினரோ, பொலிசாரோ, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்ல முடியாது. இருந்தாலும் அப்பிரதேசங்களிலும் வாக்களிப்பை நடத்துவது கட்டாயமானது என ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராஜித சேனாரட்ண தெரிவிக்கையில் குறித்த பிரதேசத்தில் வாழும் மக்களின் வாக்களிக்கும் உரிமை உறுதி செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# ஹெல உறுமய வேட்பாளர் பட்டியலிலிருந்து இரு பௌத்த பிக்குகள் விலகல்

ஹெல உறுமய கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இருந்து இரண்டு பௌத்த பிக் குமார் விலகியுள்ளனர்.

மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட பூச்வராம விகாராதிபதி வெருலகஸ்தன்னே ராகுல தேரர் மற்றும் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட பௌத்த மதகுருவான மகா ஹுனுபிட்டிய சாசன சிரிதிஸ்ஸ ஆகியோரே போட்டியில் இருந்து விலகியுள்ளனர்.விருப்புத் தெரிவு வாக்குகள் தொடர்பிலே ஏற்பட்ட விரிசல்கள் காரணமாகவே இவர்கள் விலகியுள்ளனர். (32)

# சு.கட்சியினரை விட ஜே.வி.பி. உறுப்பினரில் சனாதிபதிக்கு அதிக நம்பிக்கை உண்டு

## ஜே.வி.பி.யின் களுத்துறை மாவட்ட உறுப்பினர் கூறுகிறார்

(கொழும்பு)

தனது கட்சியில் உள்ள அங்கத்தவர்களை விட எமது கட்சியில் உள்ள அங்கத்தவர்கள் மீது கூடுதலான நம்பிக்கையை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொண்டுள்ளார் என ஜே.வி.பி. கூறுகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள அங்கத்தவர்கள் பலர் இக்கூட்டு கட்சி அமைத்ததற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. இதனால்தான் இக்கூட்டமைப்பு உருவாக்க காலம் எடுத்தது என ஜே.வி.பி.யின் களுத்துறை மாவட்ட அங்கத்தவர் பியசிறி விஜேநாயக்க கூறினார். சிறிலங்கா சுதந்திரக்கட்சி- ஜே.வி.பி. கூட்டமைப்பில் ஜே.வி.பி.க்கு 4 அமைச்சர்களும் 8 பிரதி அமைச்சர்களும் கிடைக்கும் என அவர் மேலும் கூறினார்.

# ஐ.தே. முன்னணியின் ஆட்சியில் மு.காங்கிரஸ் முஸ்லிம் மக்களுக்காக என்ன செய்தது

## -கேள்வி எழுப்புகிறார் பேரியல் அஷ்ரப்

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்க ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்காக என்னத்தைச் செய்தது. உரிமைகளுக்காக சண்டையிடுவதைவிட்டு கட்சியின பெயருக்கும் களங்கம் உண்டாக்கியது. முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரசுக்கு ஆதரவு தெரிவிக்க முதல் இருதடவை சிந்தித்துப் பாருங்கள் என திகாமடுல்லவில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

என்னுடைய கணவர் முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காக பாடுபட்டவர். தனிப்பட்ட நலனுக்காக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைக்கப்படவில்லை. முஸ்லிம்கள் வெட்கப்படுமளவிற்கு முஸ்லிம் காங்கிரஸ் நடக்கிறது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சரியான பாதையில் செல்கிறதா என ஒவ்வொரு முஸ்லிமும் அவதானிக்க வேண்டியது அவர்களின் கடமையாகும்.

நாங்கள் முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாத்து ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளோம் என பேரியல் அஷ்ரப் மேலும் கூறினார்.

# நிலாவெளி தமிழ் ம.வித்தியாலயத்தில் சர்வதேச பெண்கள்தின நிகழ்வு

யு.என்.எச்.சி.ஆர் அனுசரணையுடன் இலங்கை செஞ்சிலுவை சங்கத் திகோணமலை மாவட்டக் கிளையினாதரவில் சர்வதேச பெண்கள்தின நிகழ்வுகள் மார்ச் மாதம் 07 ஆம் திகதி நிலாவெளி தமிழ்மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

பிரதம விருந்தினராக யுஎன்.எச்.சி.ஆர் திருமலை தலைமைப் பிரதிநிதி பிரிட்டா ஹெலேண்ட் பங்குபற்றுகின்றார். விசேட விருந்தினராக மாகாணப் பண்பாட்டுத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி கலந்து கொள்கிறார். கலை, கதம்ப நிகழ்வுகளும் இடம்பெறும்.

# சமகால அரசியல் கருத்தரங்கு கிளிநொச்சியில் நடைபெற்றது

(அலுவலகசெய்தியாளர்)

சமகால அரசியல் கருத்தரங்கு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி பெண்கள் புனர்வாழ்வு மாவட்டச்செயலகத்தில் இக்கருத்தரங்கு கிளி.பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் த.நிருபன் தலைமையில் நடைபெற்றதுடன் இக்கருத்தரங்கில் அரசியல்துறை நடுவப்பணியகத்தைச் சேர்ந்த சங்கீதன், கால்நடைவைத்திய அதிகாரி மாதவராசா, கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலர் மாணிக்கம் கிருஷ்ணபுரம் கி.அ.ச. தலைவர் இ.இரத்தினம் ஆகியோர் கலந்து சமகால அரசியல் கருத்துரைகளை வழங்கினர்.

அதேபோன்று நேற்றுப்பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயமண்டபத்தில் கிளிநொச்சி வர்த்தக சங்கத் தலைவர் சி.பாபு தலைமையில் சமகால அரசியல் கருத்தரங்கு இடம்பெற்றது. கிளிநொச்சி வர்த்தக சங்கத்தலைவருடனான இக்கருத்தரங்கில் வர்த்தக சங்கச்செயலர் சி.நவரத்தினராசா கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார். (சோ)

# வன்முறையற்ற நீதியான தேர்தல் நடத்த ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத்தேர்தல், வன்முறைகளற்ற முறையில் நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்படவேண்டும்.

இவ்வாறு ஐரோப்பிய யூனியனின் முன்னாள் கண்காணிப்பாளர் ஜோன் குஷ்னகன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் அறிக்கையில் கூறுகையில்,

சகல அரசியல் கட்சித்தலைவர்களும் இந்த விடயத்தில் மிகவும் பொறுப்புணர்வுடன் நடப்பதனையே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு வன்செயல் ஒரு பகுதியல்ல. வன்செயல் என்பது ஜனநாயகத்தின் கருத்துக்களுக்கு நேர்மாறானதாகும். தேர்தல் காலத்தின் முதல் இரண்டு வாரங்களில் 158 வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. இது மிகவும் வருந்தத்திற்குரியது.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு கொலைச் சம்பவங்கள் நடந்துள்ளன. இது தேர்தல் நடவடிக்கைகளை குழப்பும் முயற்சியாகும்.

அரசியல் கட்சிகளின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் விதத்தில் அந்தக்கட்சிகள் மீது நேரடியாகத் தாக்குதல் நடத்தப்படுகின்றது.

ஐரோப்பிய யூனியனின் அவதானிப்பாளர்கள் இலங்கைக்கு தேர்தல் கண்காணிப்பாளர்களாக வந்தால் இந்தக் காலப்பகுதியில் நடந்தவற்றின் மூலம் இங்குள்ள நிலைமைகளை அறியமுடியுமெனவும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பி.சபை உறுப்பினர் கைது

(கொழும்பு)

வென்னப்புவ பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சம்பவம் ஒன்றில் வென்னப்புவ பிரதேசசபை உறுப்பினர் கைது செய்யப் பட்டிருக்கிறார். மாரவல பிரதேசத்தில் வீடு ஒன்றைத் தாக்கியது தொடர்பாகவும், சில பேரைக் காயப்படுத்தியது தொடர்பாகவும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இன்னொருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆனால் அவர் இன்னும் கைது செய்யப்படவில்லை. (32)

# 60 சந்தேக நபர்கள் விரைவில் கைதாவர்

## புலனாய்வுப் பிரிவு பொலிசார் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 60 பேரை மிக விரைவில் கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக சிறிலங்காவின் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரதேச பொலிஸ் பிரிவுகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளிடம் கூறப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ஐ.ம.சு. முன்னணியின் வேட்பாளர் மீது ஐக்கிய தேசியமுன்னணியினர் தாக்குதல்

(கொழும்பு)

குருநாகல் மாவட்டம் மாவத்தகம தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் வேட்பாளராகப் போட்டியிடும் நிரஞ்சன் விக்கிரம தாக்கப்பட்டுள்ளார்.

இவரும் இவருடைய கட்சியினரும் இத்தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட போது இவர்களுடைய வாகனம் நொருக்கப்பட்டும் கட்சியின் ஆதரவாளர்களும் அடித்துவிரட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டவர்கள் ஐக்கிய தேசிய முன்னணியினர் என்று குற்றம் சாட்டப்படுகின்றது.

# விளையாட்டுப் போட்டி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகியுள்ளது. இதனை ஒட்டுசுட்டான் விளையாட்டு உத்தியோகத்தர் திலீபன் ஆரம்பித்துவைத்துள்ளார்.

# தேர்தல் ஒழுங்குகளில் மாற்றம் தேர்தல் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

**மட்டக்களப்பில் வேட்பாளர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டதையடுத்து தேர்தல் ஒழுங்குகளில் மாற்றங்களைக் கொண்டு வர தீர்மானித்திருப்பதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

திருத்தியமைக்கப்படும் ஒழுங்குகள் விரைவில் அறிவிக்கப்படுமென உதவி தேர்தல் ஆணையாளர் சேனநாயக்க டெயிலி நியூஸ்இற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். பாதுகாப்பு பற்றாக்குறை சம்பந்தமாகப் பல கட்சிகளிடமிருந்தும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் தேர்தல் நடத்துவது சம்பந்தமாக நிலைமைகளை ஆராய்ந்து புதிய விதிமுறைகளை விரைவில் அறிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்த நடவடிக்கைகள் இப்பகுதிகளில் எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

## இந்தோனேசியப்படகு எரிந்து நாசம்

காலி துறைமுகத்தில் தரித்து நின்ற இந்தோனேசியா மீன்பிடிப் படகு தீப்பிடித்து எரிந்தது. இதனால் 10 கோடிரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தீப்பிடித்த நேரம் படகில் 2 பவுசர் எரிபொருள் இருந்ததாகவும் விபத்துக்கான காரணம் என்ன என்பதும் தெரியவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த புதனகிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (32)

## தமிழ்த் தேசியத்தின் கொள்கைக்காக அனைவரும் தேர்தலை எதிர்கொள்க

### வவு. அரசியல்துறைப் பொறுப்பாளர்

(வவுனியா)

மக்கள் மத்தியில் பேதங்கள் இருக்கலாம் விருப்பு வெறுப்புக்கள் இருக்கலாம், இவை எல்லாவற்றையும் மறந்து தமிழ்த் தேசியத்தின் கொள்கைக்காக அனைவரும் இணைந்து இந்தத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

வவுனியா முத்தையா மண்டபத்தில் இடம்பெற்ற அரச திணைக்கள உயர் அதிகாரிகளுடனான சந்திப்பில் கருத்துரை வழங்கிய எழிலன் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற அனைத்து மக்களும் நிம்மதியாகவும் ஏனைய மக்கள் போன்றும் வாழவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.







## முத்துஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ — து) ஒட்டுசுட்டான்

### கிளைக்குழுத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுக்கூட்டங்கள்

கிளை இல:- 04 கிளை-06

2004-02-21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த மேற்படி கூட்டங்கள் போதிய அங்கத்தவர்கள் சமுகமின்மையால் நடைபெறவில்லை. எனவே நடைபெறாத கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுக்கூட்டங்கள் எதிர்வரும் 2004-03-07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு குறிப்பிட்ட கிளைகளில் நடைபெறவுள்ளது. எனவே குறிப்பிட்ட கிளை உறுப்பினர்கள் குறித்த தினத்தில் கிளைகளிற்குச் சமுகம் கொடுத்து தங்கள் கிளைக்குழுவை யும் சங்கத்திற்கான பொதுச்சபை பிரதிநிதிகளையும் தெரிவுசெய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

| கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப்பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 04 | கணேசன் கிளை | கணேசபுரம் கிளை நிலையம் மு.ஐ.கட்டு |
| 06 | மன்னா கண்டல் | மன்னாகண்டல் கிளை நிலையம் |

செயலாளர்,
மு.ஐ.க.ப.நோ.கூ. சங்கம்,
ஒட்டுசுட்டான்

(சி.7166)



## ஏல விற்பனை

வன்னி கல்வி மேம்பாட்டுப் பேரவைக்குச் சொந்தமான36ஶ்ரீ3801(த12-1463) இலக்கம் கொண்ட உழவு இயந்திரமும், பெட்டியும் ஏலத்தில் விற்கப்படவுள்ளது. எதிர்வரும் 07-03-2004 தொடக்கம் 15-03-2004 வரை வவுனியா வடக்கு கனகராயன்குளம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என்பதனை அறியத் தருகிறேன்.

ஏல விற்பனை நாள் பத்திரிகையில் விரைவில் அறியத்தரப்படும்.

செயலாளர்,
தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை,
வன்னி.

(சி-9320)



## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை:- பாதுகாப்பு உதவியாளர் (அமைய அடிப்படை)

தகைமைகள்:-
I. 10 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
II. நல்ல உடல் வலுவும், தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்
III. உயரம் 5'5'' இற்குக் குறையாமலும், நெஞ்சுச்சுற்று 32'' இற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.
IV. ஆண்பாலார் மட்டும்.
V. கராத்தே போன்ற தற்காப்புக் கலைகளிற்கான சான்றிதழ்கள், உடற்தகைமையை உறுதிசெய்யும் சான்றிதழ்கள் என்பவற்றைக் கொண்டுள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அகவை எல்லை:- 28-35 வருடங்கள்.

ஊதியம்:- நாளொன்றுக்கு உரூபா நூற்று எழுபத்தைந்து (உரூபா175)

வேண்டுகையர்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன்விளக்கங்கள் (சுயவிபரம்) அடங்கிய படிவத்துடனும், தேவையான ஆவணங்களுடனும் வரும் 2004.03.10 ஆம் நாள் புதன்கிழமை பி.ப.1.00 மணிக்கு திருநகர் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகம் நடுவப்பணியகத்திற்குப் பின்வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

★ பிறப்புச் சாட்சிப்பத்திரம் (மூலம்,படி)
★ தேசிய அடையாள அட்டை (மூலம், படி)
★ கல்வித்தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் (மூலம், படி)
★ ஏனைய தகைமைகளை வெளிப்படுத்தும் சான்றிதழ்கள்
★ கிராம அலுவலரின் நற்சான்றிதழ்.

(சி-9408)

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.



## சிந்தனைக்கு

தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்; தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 06-03-2004


## தற்காலிகமானதே!

கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் அமைப்புக்குள் தற்பொழுது ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நெருக்கடியானது தற்காலிகமானது. விரைவில் தீர்த்து வைக்கத்தக்கதும் ஆகும். இதனை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும் தம்மை நேற்று முன்தினம் சந்தித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் டொண்ட் புறுாவ் ஹெறாவ்டேயிடம் தெரிவுபடுத்தியிருந்தார்.

ஒரு விடுதலைக்காகப் போராடும்அமைப்பினுள் இவ்வாறு தற்காலிகமானதும் சிறிய அளவினதுமான நெருக்கடிகள், பிரச்சினைகள் ஏற்படுவது ஒன்றும்ஆச்சரியத்திற்குரியதல்ல. இந்தவகையில் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள்ளும் உலகில் ஏனைய விடுதலை இயக்கங்கள், அமைப்புக்கள் என்பனவற்றுடன் ஒப்பிடும்அளவிற்குத் தீவிரமானதாகவும், பாரியதாகவில்லாது விடினும் எப்பொழுதாவது இத்தகைய நெருக்கடிகள் ஏற்படுவதுண்டு.

ஆகையினால், தற்போதைய நெருக்கடியானது விடுதலைப் புலிகளுக்கும் புதிதானதல்ல. சர்வதேச சமூகத்திற்கும் புதிதானதல்ல. ஆனால், இத்தகையதொரு நெருக்கடியைத் திறம்படக் கையாண்டு வெற்றிகொள்ளும் ஆற்றல் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களிடம் நிரம்பவே உண்டு. இத்தகைய நெருக்கடிகளைக் கண்டு அவர் அச்சுவிட மாட்டார். இந்நெருக்கடியை மிகவும் சாதுரியமாகவும், துணிவுடனும் அவர் எதிர்கொண்டு தீர்த்து வைப்பார் என்றே எதிர்பார்க்கலாம்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் இயக்கத்திற்குள் ஏற்பட்டுள்ள இந் நெருக்கடி குறித்து விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர்களோ அன்றி தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர்களோ அன்றி விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்றகடிக்க வேண்டும் என்ற அபிலாசை கொண்ட எவருமோ மகிழ்ச்சி கொள்ளவோ அன்றி திருப்திப்பட்டுக்கொள்ளவோ எதுவுமேயில்லை.

ஏனெனில், விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு மக்களியக்கமாகும். ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் இயக்கம். அதுமட்டுமல்ல, அதன் தலைமையானது உறுதியானதும் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு சமாளிக்கும் வல்லமையும், திறனும்வாய்ந்ததென்பது கடந்த காலத்தில் நிருபணம் செய்துமுள்ளது.

எடுத்தக்காட்டாக, உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்திய இராணுவத்துடன் மோதலில் ஈடுபட்டது மட்டுமல்ல, அதனைத் திறம்பட நடத்திக்காட்டியதோடு, சிறிலங்கா அரசு கடந்த நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் நடத்திய பாரிய படை நடவடிக்கையினை எதிர்கொண்டு வெற்றியும் பெற்றுக்கொடுத்தமையும் சுட்டிக்காட்டத்தக்கதோடு சர்வதேச ரீதியில் ஏற்பட்ட சில அழுத்தங்களையும் அது வெற்றிகரமாக கையாண்டுள்ளது.

ஆகையினால் விடுதலைப்புலிகளுக்குள் ஏற்பட்ட சிறுநெருக்கடியினை பெரிதுபடுத்தி - அதீதமான கற்பனைக்கும், மதிப்பீட்டிற்கும் யாரும் செல்வார்களேயானால் இதில் தோல்வியையே சந்திக்க வேண்டியதாக இருக்கும். அத்தோடு, இச்சிறு நெருக்கடியை மனதிற்கொண்டு புலிகளுக்கு எதிரான அரசியல் - இராஜதந்திர - இராணுவ நகர்வுகளை சிறிலங்கா ஆட்சியாளர்களோ அன்றி வேறு எவருமோ மேற்கொள்ள முற்படுவார்களேயானால் அவர்கள் இலங்கையில் தற்பொழுது நிகழும் அமைதிக்கும், எதிர்காலத்தில் சமாதானம் குறித்து மேற்கொள்ளப்படவேண்டிய முயற்சிகளுக்கும் ஊறு விளைவிப்பவர்களாகவே இருப்பர்.

இதேசமயம் தற்பொழுது தேர்தல் காலம் ஆகையினால் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள குழப்பமானது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சோர்வை ஏற்படுத்தியுள்ளது என்பது வெளிப்படையானது. ஆனால், தமிழ் மக்கள் இது குறித்து எதற்கும் கவலைப்படத்தேவையில்லை. தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களால் இவ்விவகாரம் தீர்த்துவைக்கப்படும். ஆகையினால் மக்கள் தமது நாளாந்தக் கடமைகளிலும், தேர்தல் கடமைகளிலும் உற்சாகத்துடன் ஈடுபடுதல் வேண்டும்.

அதிலும், தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சிறிய சலசலப்புக்காரணமாக தமிழ்மக்களின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பன கேள்விக்குள்ளாகிவிடும் எனச் சிலர் கற்பனை செய்துகொண்டிருப்பர். ஆகையினால், ஏற்கனவே தேர்தலில் பங்களிப்புச் செய்வதற்கு ஒதுக்குவதெனத் தீர்மானித்த காலத்தை விட அதிகளவு காலத்தை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

அதாவது விடுதலைப்புலிகளுக்குள் மட்டக்களப்பில் உருவாகியுள்ள சர்ச்சையானது, தேர்தலில் எத்தகைய பாதிப்பையும் விளைவிக்காதவாறு தமிழ் மக்கள் தமது ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்துதல் வேண்டும். ஏனெனில், இத்தேர்தல் மூலம் எமது தன்னாட்சி உரிமைகளுக்கான அங்கீகாரம் பெறப்பட்டு சர்வதேச சமூகத்தின் முன்னால் எமது அபிலாசைகள் முன்வைக்கப்படுதல் வேண்டும். ஆகையினால், மக்கள் இத்தேர்தலில் தீவிர அக்கறை கொண்டு வாக்களிக்க முன்வரவேண்டும்.

மேலும், மட்டக்களப்பில் தற்பொழுது ஏற்பட்ட நெருக்கடியானது தற்காலிகமான சிறு நெருக்கடியே. ஆயினும் இந்நெருக்கடியின் பின்புலம் அறியப்படவில்லை. ஆனால் பின்புலம் எவ்வாறாக இருப்பினும் சரி இந்நெருக்கடி மூலம் தமிழர் ஒற்றுமையும் தேசிய ஒருமைப்பாட்டையும் குலைத்து உரிமைக்கான போராட்டத்தையும், பேரம் பேசும் வலுவையும் வலுவிழக்கச்செய்தலே நோக்கமாகும். ஆகையினால், இத்தேர்தலில் தமிழ் மக்கள் தமது தேசியம், ஒருமைப்பாடு என்பன பேணப்படும் வகையில் பங்காற்றவேண்டும். அதுவே தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் எதிராகச் செயற்படுவோருக்குத் தமிழ் மக்கள் கொடுக்கும் பதிலாக இருக்க முடியும்.

# தமிழரின் ஆதரவுடன் ஆட்சியமைப்போம் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க

(கொழும்பு)

இம்முறை பொதுத்தேர்தலில் 103 ஆசனங்களை வெற்றிகொண்டு, சிறுபான்மை தமிழ் இனத்தவர்களின் உதவியோடு மீண்டும் அரசமைப்போம்.

இவ்வாறு அமைச்சர் திசாநாயக்க கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றி சகல அதிகாரங்கள் கொணட பிரதமர் பதவியை சனாதிபதி ஏற்படுத்துவதற்கு தற்போது முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

இதற்கு ஐக்கிய தேசிய முன்னணி முழுஆதரவும் வழங்கத் தயார். ஆனால் தனது சுய இலாபத்திற்காக இதைச்செயற்படுத்துவதற்கு முயற்சி செய்வாரானால் இதை முற்றுமுழுதாக நாங்கள் எதிர்ப்போம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# பிரச்சாரத்தின் போது ராணுவப்பாதுகாப்பு ஐ.ம.சு. முன்னணி மீது ஐ.தே.முன்னணி குற்றச்சாட்டு

## -தேர்தல் ஆணையாளருக்கும் எழுத்துமூலம் அறிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தமது தேர்தல் பிரச்சாரங்களின் போது இராணுவத்தினரைப் பயன்படுத்தி வருவதாக ஐக்கிய தேசிய முன்னணியினரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்ட தேர்தல் சட்டங்களையும் மீறி தனக்கு செல்வாக்கு குறைந்து வரும் தேர்தல் தொகுதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் அப்பகுதிகளில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் களுக்கு மேலதிகமாக பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இராணுவத்தினரையும் கடமையில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இது சம்பந்தமாக உடன் நடவடிக்கைகள் எடுக்குமாறு ஐக்கிய தேசிய முன்னணியின் மலிக் சமரவிக்கிரம தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அவர்களுககு இராணுவ பாதுகாப்பு வழங்கப் படும் என்று இராணுவப்பேச்சாளர் கேணல் சுமேதபெரேரா கூறியுள்ளார்.

வேட்பாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாகவே இராணுவப் பாதுகாப்பு வழங்கப் படவுள்ளது.

வேட்பாளர்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்படுவதற்கான உத்தரவை - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் இராணுவத் தளபதிக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# தேர்தலில் மோசடிகள், வன்முறைகளும் இடம்பெறுவதற்கு இடமளியோம்

## *சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்*

எதிர்வரும் பொதுத்தேர் தலின் போது மோசடிகள் இடம் பெறுவதற்கு இடமளிக்கமாட்டோம் எனவும், கள்ள வாக்குகள் போடுவதற்கோ வன்செயல்கள் இடம்பெறுவதற்கோ அனுமதிக் கப்படமாட்டோமென சனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் இரண்டாம் திகதி உண்மை வெற்றிபெறும். கூட்டணி அரசாங்கத்தின் கீழ் ஊழல்களுக்கும், மோசடிகளுக்கும் இடமளிக்கமாட்டோம். அத்த கைய நடவடிக்கைகளில் ஈடுபடு வோர் உடனடியாக வெளியேற்றப்படுவார்கள். எனவே மக்கள் எமது கொள்கைகளை செயற்படுத்துவதற்கு அதிகாரத்தை எமக்கு வழங்குவார்களென தெரிவித்த அவர்

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:-

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைப் பிரகடனம் அடுத்த சில தினங் களில் வெளியிடப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தி சமூக, பொருளாதாரம் என்பவற்றிற் கான திட்டங்கள் முன்னணியின் கொள்கைப் பிரகடனத்தில் இடம் பெற்றுள்ளது. கடந்த புதன் கிழமை மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை யாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இக்கொள்கைப் பிரகடனத்தை செயற்படுத்தா தோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென வலியுறுத் தியுள்ளார்.

## பேருந்து மூலம் அஞ்சல் சேவை

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவிற்கும், மாங்குளத்திற்குமிடையில் அஞ்சல் சேவை பேருந்து மூலம் நடைபெறுகின்றது. இதுவரை காலமும் மாங்குளம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு ஒட்டுசுட்டான், கரிப்பட்டமுறிப்பு, முத்துஐயன்கட்டு, முள்ளியவளை ஆகிய உப அஞ்சலகங்களிலிருந்து ஈருருளி மூலமே எடுத்துச்செல்லப்பட்டமையினால் அஞ்சல் சேவை தாமதமடைந்தது. இச்சேவை 01.03.2004 இருந்து பேருந்து மூலம் நடைபெறுகிறது. (05)

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரச்சாரம் யாழ். இல் முழுவீச்சில் நடைபெறுகிறது

(வடமராட்சி)

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் மக்கள் ஆதரவுகோரி குடாநாடெங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுவீச்சிலான பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தேர்தல் சின்னமான "வீடு" மாதிரியில் அமைக்கப்பட்ட ஊர்திகளில் ஒலிபெருக் கிகள் பொருத்தப்பட்டு எழுச்சி கீதங்கள் இசைக்கப்பட்டு வருகின்றது. இவ்வூர்திகள் கிராமங்கள் தோறும் செல்ல, கூட்டமைப்பின் வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று ஆதரவுகோரி பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே வடமராட்சிப் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பிரச்சாரப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பொலிகண்டியில் இடம்பெறவுள்ளது. வடமராட்சிப் பகுதி மீனவ சங்கங்களின் ஏற் பாட்டில் இடம்பெறும் இப்பொதுக் கூட்டத்தில் விடுதலைப்புலிக ளின் கடற்புலிகள் முக்கியஸ் தர்களும் கலந்து கொண்டு உரை யாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை தொண்டமனாறு மீனவ சங்கத்தின் ஏற்பாட்டில் பிரச்சாரக் கூட்டமொன்று நேற்று முன்தினம் அப்பகுதியில் இடம் பெற்றிருந்தது. வடமராட்சி வடக்கு மீனவசங்கங்களின் சமா சப்பிர முகர்களும் கடற்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த வேந்தன் அவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாகப் பிரசாரத்தை மேற்கொண்டிருந்தனர்.(27)

# இல.யில் அமைதி, பொருளாதார மீள்கட்டமைப்புக்கு அமெ.அரசு உதவ செனட் குழுவில் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர அமைதியை நிலைநாட்டுவதற்கும் சமூக பொருளாதார மீள் கட்டமைப்புக்கும் வாஷிங்டன் அரசு உதவ வேண்டும் என அமெரிக்க துணை வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா கேட்டுள்ளார்.

தெற்காசியாவிற்கான உதவித் திட்டங்கள் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுக் கொள்கைகளைக் கட்டுப்படுத்தும் செனட் குழுவின் முன் உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால தீர்வு யோசனைகள் சமாதானப்பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க, உதவலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் மீள் கட்டமைப்பு புனர்வாழ்வு நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான குறுகிய கால சிறந்த, பயன்களைத் தரக்கூடிய திட்டங்களுக்கு அமெரிக்கா நிதியுதவி செய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜே.வி.பி. கேட்கும் அமைச்சுக்களைக் கொடுத்தால் நாட்டின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படும்

## -அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க எச்சரிக்கை

(கொழும்பு)

ஜே.வி.பி.யினர் கோரி இருக்கும் மூன்று அமைச்சுக்களையும் சந்திரிகா வழங்குவாரானால் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும என அமைச்சர் திஸ்ஸஅத்தநாயக்க கூறியுள்ளார்.

அவர்கள் கேட்டது கல்வி அமைச்சு மற்றும் உதவிப் பாதுகாப்பு அமைச்சு இரண்டையும் வழங்கினால் மறுமுறையும் ஜே.வி.பினர் நாட்டில் கல்வி பயிலும் சகலருக் கும் இயக்கம் சம்பந்தமான கருத் தரங்குகளை வழங்கி கல்வி பயிலும் மாணவ மாணவிகளை படுகுழியில் தள்ளிவிடப் போகின் றனர். முழு நாட்டிலும் மின்சாரத்தை தடைசெய்த, நாட்டில் தொழிற்சாலைகளை எரித்த கொலைகார ஜே.வி.பியினருக்கு உதவிப் பாதுகாப்பு அமைச்சு பதவி வழங்கினால்,

இது முழு நாட்டின் பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் எனவும் நாட்டில் ஜே.வி.பியினர் அதிகாரத்தைக் கைப்பற்றினால் மக்கள் பெரும் கஸ்டங்களுக்குள்ளாவார்கள் என அமைச்சர் திஸ்ஸஅத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# வன்னி தொழில்நுட்ப நிறுவனத்தில் கணினி செயல்முறைக் கண்காட்சி

(அலுவலகசெய்தியாளர்)

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம் (வன்னிரெக்) இலவச கணினி செயல்முறைக் கண்காட்சி நேற்று ஆரம்பித்து வைக்கப்பெற்றது.

கிளிநொச்சி வன்னிரெக் நிறுவகத்தில் நிறுவகத் தலைவர் சிவா.கோபாலன் தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பெற்ற மேற்படி கண்காட்சியின் ஆரம்பநிகழ்வில் அமெரிக்க நாட்டைச்சார்ந்த இராஜரட்ணம், கிளிமாவட்ட செயலக திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் மத்தியூஸ் ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைக்க தமிழீழ தேசியக கொடியினை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக செயலாளர்நாயகம் புலித்தேவன் ஏற்றி வைத்ததுடன் கண்காட்சியினையும் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

மேற்படி கண்காட்சியினை கிளிமாவட்ட பாடசாலை உயர்தர மாணவர்கள் அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் பெருமளவில் பார்வையிட்டமையினை அவதானிக்க முடிந்தது.

இன்றும் மேற்படி கண்காட்சி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தமிழருக்கு சுயாட்சி அதிகாரம் நிறுவப்படும் வரை ஈ.பி.டி.பி. போன்றவை உயிர் வாழும்

## நவ சமசமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகுகருணாரட்ண

(லண்டன்)

தமிழர் தாயகத்தில் சுயாட்சி அதி காரம் நிறுவப்படும் வரை ஈபிடிபி. போன்ற கட்சிகள் உயிர் வாழும் அவர்கள் முட்டாள்கள் அவர்களுக்கு இத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் பதில் கூறுவார்கள் என்று கூறுகிறார் நவசமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் கருணாரட்ண ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகளின் எதிர்காலம் என்ன? என்று தமிழ் இணையத்தள செய்தி யாளர் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மீண்டும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங் கத்தை அமைத்தால் சந்தி ரிகா குமாரதுங்க சனாதிபதி என்ற வகையில் சமாதான நடவடிக்கையில் தலையீடு செய்வார என கேட்ட போது சந்திரிகா குமாரதுங்க ஊடகத்திற்கு அப்பாற்பட்டவர் என்றார் கருணாரட்ண.

# பருத்தித்துறை பிரதம தபாலகத்தை மீளத்திறக்கக் கோரிக்கை

உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அமைந்துள்ள பருத்தித்துறை பிரதம தபாலகத்தை மீளத்திறக்க நடவடிக்கை எடுக்குமாறு தபால்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அவரிடம் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்சிவராஜலிங்கம் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மேற்படி பருத்தித்துறை பிரதம தபாலகத்தை மீள திறக்க ஏதுவாக, ஆரம்பகட்ட புனரமைப்புப்பணிகளிற்கென ஒரு தொகை நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயினும் பருத்தித்துறை துறைமுகத்தை அண்டிய பகுதிகளை ஆக்கிரமித்துள்ள படையினர். 1996ஆம் ஆண்டு முதல் இப்பகுதிகளில் முகாமிட்டு நிலைகொண்டுள்ளனர். அத்துடன் அப்பகுதியினுள் அமைந்துள்ள தபாலகக்கட்டடமும் படையினரின் பாவனையிலேயே தொடர்ந்தும் உள்ளது.

எனினும் தபாலகத்தை மீள இயக்க ஏதுவாக, படையினரின் பாவனையிலுள்ள தபாலகக்கட்டடத்தை விடுவிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதும் படைத்தரப்பு இவ் விடயத்தில் அக்கறையற்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி தபாலக கட்டடத்தை விடுவித்து, மீண்டும் சொந்த இடத்தில் இயங்கு வது தொடர்பாக பாதுகாப்பு அமைச சுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தபால்மா அதிபர் உறுதியளித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

தற்போது பருத்தித்துறை பிரதம தபாலகம் தும்பளை வீதியிலுள்ள தனியார் கட்டடத்தில் போதிய அடிப்படை வசதிகள் ஏதுமின்றி இயங்கிவருகின்றது. அத்துடன் குறித்த உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள பருத்தித்துறை பலநோக்குக கூட்டுறவு சங்கத்தை இயக்க படைத்தரப்பு அனுமதியும் வழங்கியுள்ளது.

# வவுனியா மாவட்டத்தில் பார்த்தீனியம் ஒழிப்பு வாரம்

வவுனியாவில் பார்த்தீனியம் ஒழிக்கும் நடவடிக்கையில் கல்வித்திணைக்களமும் தொண்டர் ஸ்தாபனங்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் வவுனியா வடக்கு கல்வித்திணைக்களத்தின் அதிகாரிகள் 60பேர் சிரமதானம் மூலம் மன்னார் வீதியில் பார்த்தீனிய தாவரங்களை அழித்தனர். காமினி மகா வித்தியாலயம் முதல் வவுனியா அரச செயலகம் வரை மன்னார் வீதி துப்புரவு செய்தனர்.

தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பார்த்தீனியம் தாவரம் ஒழிப்பு வாரம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மக்கள் மத்தியில் பார்த்தீனியம் தாவரம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி தாவரத்தை முற்றாக அழிப்பதே முக்கியமான நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகிறது. (21)

## விபத்தில் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மகாவித்தியாலயச் சந்தியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். இருசக்கர உழவியந்திரமும் உந்துருளியும் மோதிக் கொண்டதில் உந்திதுருளியில் பயணம் செய்த முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த விஜயகுமார் (வயது24) என்பவர் காயமடைந்து முல்லமாவட்டம் கட்டம் 1 வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு காவல் பணிமனையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகினர். (20)

# முல்லைத்தீவு இந்து வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி

முல்லைத்தீவு இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்லத்திறனாய்வுப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் 2.00மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர புஸ்பநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லைப் பிரதேசப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றிவைக்க, பாடசாலைக் கொடியினை பாடசாலை அதிபர் புஸ்பநாதன் ஏற்றினார். ஆசியுரையினை ஓய்வுபெற்ற அதிபர் லே.சண்முகம் நிகழ்த்தினார்.

சிறப்புரையினை கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி தியாகராஜா நிகழ்த்தினார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை கோட்டக்கல்வி அதிகாரி, முல்லைத்தீவு காவல் பணிமனைப் பொறுப்பாளர், கடற்புலிகளின் முல்லைப்பிரதேசப் பொறுப்பாளர் திருமதி க. இராசசிங்கம், அயல் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் வழங்கினர். (20)

## எஸ்.பி....

விரைவில் சிறையில் அடைக்கப்படுவார். சட்டத்திற்கு மாறான விடயங்களில் தலையிடுகிறார் என்று அனுரா கூறியுள்ளார்.

இக்கூற்றில் எதுவித சந்தேகமும் இல்லை. இக்கூற்று ஆபத்தானது நாட்டின் தேர்தல் சட்டத்திற்கு மாறானது என ஹப்புக்கொட்டுவ கூறினார்.

## பன்முகத்தன்மை...

விடுத்ததுள்ள அறிக்கையில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரும் மற்றும் அரசியல்வாதி ஒருவரும் கிழக்குப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டிருப்பதும், வடபகுதியில் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களும்,

சுதந்திரமாகவும், நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலைக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தி உள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலைகளையும் வன்முறைகளையும் ஐரோப்பிய ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

பயமுறுத்தல், அச்சம் வன்முறையற்ற தேர்தலை நடத்துவதற்கு சகல துறையினருக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதியில் பொலிசாரும், விடுதலைப் புலிகளும் தேர்தல் நடைமுறைகளைப் பாதுகாப்பதில் முக்கியபங்கை வகிக்க வேண்டியவர்களாக உள்ளனர் என்றும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

## கிளி...

(வயது07) என்பவரை விட்டுவிட்டு கடைசி மகனையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டுள்ளார். இவ்வாறு புறப்பட்ட தனது மனைவியும் மகனும் இதுவரை அவரது தயார் வீட்டுக்கு சென்றடையாத நிலையில் அவர் எங்கு சென்றார் என்ன ஆனார் என்பதுபற்றித் தெரியாத நிலையில் தான் இருப்பதாகவும் இது குறித்து கிளிநொச்சி காவல் பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (லோ)

## எதிர்வரும்...

என்று அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகத்தைக்கொண்டு சொல்லவைக்கவேண்டும். எதிர்வரும் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் இதனைச் சாதிக்க முடியும் என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான க.துரைரெட்ணசிங்கம் பேசும் போது, அன்று பாண்டா-செல்வா, டட்லி-செல்வா ஆகிய ஒப்பந்தங்களைக கிழித்தெறிந்தது போன்று விடுதலைப்புலிகளுடன் செய்யப்படும் உடன்படிக்கையையும் எந்த அரசாலும் கிழித்தெறிய முடியாது. விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் அழிக்க முடியாது என்பதை கொழும்பு அரசாங்கங்கள் உணர்ந்துள்ளன. திருமலை மாவட்ட தமிழ் மக்கள் நூற்றுக்கு நூறு தமிழ்க் கூட்டமைப்பை ஆதரித்து சாதனை புரியவேண்டும் என்று கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முஸ்லிம் வேட்பாளர் சஹாப்தீன் பேசும்போது, வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுவது தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையிலே தான் தங்கியுள்ளது. வடக்கு-கிழக்குக்கு வெளியே வாழும் முஸ்லிம் மக்கள் அங்குள்ள பெரும்பான்மையின மக்களுடன் பல் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இணைந்து வாழ முடியுமானால் வடக்கு-கிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் ஏன் இணைந்து வாழ முடியாது? என்று கேட்டார். கூட்டமைப்பு வேட்பாளர். சதா. சண்முகநாதனும் பேசினார். (27)

# பெரிய புளியங்குளம் அ.த.க.வின் இல்ல திறனாய்வுப் போட்டி

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு தச்சடம்பன் பெரிய புளியங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல திறனாய்வுப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர் திருமதி வே.நித்தியகலா தலைமையின் கீழ் நடைபெற்றது.

இதில் தேசியக் கொடியினை கரிபட்டமுறிப்பு தடைமுகாமின் காவல்துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைக்க பாடசாலைக் கொடியினை பாடசாலை அதிபர் ஏற்றியதைத் தொடர்ந்து இல்ல திறனாய்வுப் போட்டி சிறப்புற நடைபெற்றது.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி சி.ஜெயபாலன், ஆசிரிய ஆலோசகர் திருமதி கிருபாகரன், கல்விக் கழகப் பொறுப்பாளர் வாதவூரான் ஆகியோர் கலந்து இல்லங்களுக்கான பரிசில்களையும் வழங்கினர். வெற்றிக் கிண்ணங்களை மாவீரர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நினைவாக வழங்கினர்.

சிறப்பு நிகழ்வாக புரட்சிப் பாடலுக்கு உடற்பயிற்சி, கண்காட்சியும் பழைய மாணவர்களின் 10கிலோ மீற்றர் ஓட்டமும் நடைபெற்றது.

சூரியன், சந்திரன் ஆகிய இரு இல்லங்களில் சூரியன் இல்லம் 412புள்ளிகளும், சந்திரன் இல்லம 338 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (05)

★ ★ ★ ★ ★

சிவநகர் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி 01.03.2004. திங்கட்கிழமை பி.ப.1.30 மணிக்கு அதிபர் திரு .சிகின்ராச அவர்கள் தலைமையில் ஆரம்பமானது.

முதன்மை விருந்தினராக செல்வி. இ. பொன்னம்பலம் அவர்கள் (கோட்டக் கல்வி அலுவலகம்) கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக திரு.வே.பரமலிங்கம் கிராம சேவை உத்தியோகத்தர் சிவநகர் அவர்களும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.ஜி.எஸ். பரமேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டுள்ளார்.

மஞ்சள் இல்லம் பச்சை இல்லம் என இரண்டு இல் லங்கள் பங்கு கொண்டு பச்சை இல்லம் 1ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (20)

## பிற்போடப்...

இறுதிப்போட்டிகள் ஏப்ரல் மாதம் நடைபெறும் என்பதனை அரசியல்துறை மகளிர் பிரிவினர் அறியத்தருகின்றனர்.

## வெலிக்கடை...

தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த மோதல் பற்றி உடனடியாக விசாரணை நடத்துமாறு சிறைச் சாலை ஆணையாளருக்கு உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என் .யுனைட் பணிப்புரை விடுத்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.